## Basic Tamil Notes Part 1

**பிரித்து எழுதுக.**

| | |
|---|---|
| சரணாங்களே - சரண் + நாங்களே | தாமுள - தாம் + உள |
| அலகிலா - அலகு + இலா | யாரவர் - யார் + அவர் |
| விருந்தோரால் - விருந்து + ஓரால் | தற்பிரர் - தன் + பிறர் |
| நிறையுடைமை - நிறை + உடைமை | அறனல்ல -அறன் + அல்ல |
| மூவகை - மூன்று + வகை | சீரிளமை - சீர் + இளமை |
| மூலமொழி - மூலம்+ மொழி | தரவியலாத - தர + இயலாத |
| ஒலியாக்கி - ஒலி +ஆக்கி | சொற்றொடர்- சொல் + தொடர் |
| நன்றென்றல் - நன்று + என்றல் | தன்னாடு - தன் + நாடு |
| என்றுரைத்தல்- என்று + உரைத்தல் | இத்துணை- இ + துணை |
| நீரமுது - நீர் + அமுது | நன்செய் - நன்மை + செய் |
| புன்செய் - புன்மை + செய் | நறுசெய் - நறுமை+ நெய் |
| பேரறம் - பெருமை + அறம் | பெருந்தொழில் -பெருமை+ தொழில் |
| மெய்ஞ்ஞானம் - மெய்மை + ஞானம் | தொல்லுலகு - தொன்மை + உலகு |
| நுந்தை - நும் + தந்தை | இனிதேகி - இனிது + ஏகி |
| நீரமுதம் - நீர் + அமுதம் | அற்குற்ற - அல் + கு + உற்ற |
| உய்யவோர் - உய்ய + ஓர் | என்றிரந்து - என்று + இரந்து |
| பொற்கிழி - பொன் + கிழி | வெருவிலான் - வெருவு + இலான் |
| நாண்மதி - நாள் + மதி | கீரனில்லென- கீரன் + நில் + என |
| உளப்பையுள் - உளம் + பையுள் | பொருட்குற்றம் - பொருள் + குற்றம் |

பொற்குற்ற - பொன் + கு + உற்ற

தற்குற்ற - தன் + குற்றம்

இரவினீர்க்குழல் - இரவின் + ஈர் + குழல்

உரைத்தெனக்கருள் - உரைத்து + எனக்கு + அருள்

பன்னாடு - பல + நாடு

முந்நீர் - மூன்று + நீர்

பழந்தமிழர் - பழமை + தமிழர்

தொல்காப்பியம் - தொன்மை + காப்பியம்

வெண்துகில் - வெண்மை + துகில்

பல்லாயிரம் - பல+ ஆயிரம்

புறநானூறு - புறம் + நான்கு + நூறு

எத்திசை - எ + திசை

பல்கலை - பல + கலை

**இலக்கணக்குறிப்பு எழுதுக**

உலகம் - இடவாகுபெயர்

யாவையும் - உம்மை முற்றும்மை

ஆக்கல், நீக்கல், விளையாட்டு - தொழிற்பெயர்கள்

பொறுத்தல் - தொழிற்பெயர்

இகழ்வார்ப்பொறுத்தல் (இகழ்வாரைப் பொறுத்தல்) - 'ஐ' உருபு தொக்கது

அகழ்வார், இகழ்வார், ஒறுத்தார், பொறுத்தார் - வினையாலனையும் பெயர்கள்

இறப்பு, மறத்தல் - தொழிற்பெயர்கள்

இறப்பினை என்றும் **பொறுத்தல்**(பொறுத்துக்கொள்க) - 'தல்' விகுதி பெற்ற உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

அதனினும் **நன்று** - குறிப்பு வினைமுற்று

விருந்து - பண்பாகுபெயர்

நீங்காமை - எதிர்மறைத் தொழிற்பெயர்

பொதிந்து, போற்றி - வினையெச்சங்கள்

ஒழுகப்படும் - 'செய்யும்' என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று

வையார் - எதிர்மறை பலர்பால் வினைமுற்று

பொதிந்து **வைப்பர்** - உடன்பாட்டுப் பலர்பால் வினைமுற்று

செய்யி**னும்** - 'உம்' மை இழிவு சிறப்பும்மை

அறன் (அறம்), திறன்(திறம்) - மகரத்துக்கு னகரம் ஈற்றுப் போலிகள்

பொன்றும் - பெயரெச்சம்

ஒருநா**ளை** இன்பம் - 'ஐ' சாரியை

செய்யாமை நன்று - எதிர்மறைத் தொழிற்பெயர்

விடல் - அல்லீற்று வியங்கோள் வினைமுற்று

**இன்னா**ச் சொல் - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

உண்ணாது - எதிர்மறை வினையெச்சம்

தற்பிறர்(தனக்குப் பிறர்) - நான்காம் வேற்றுமைத்தொகை

நோ நொந்து - 'நொ' என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்

மிக்கவை - பலவின்பால் வினையாலனையும் பெயர்

செய்தாரை - பலர்பால் வினையலனையும் பெயர்

கேட்டார் - வினையாலணையும் பெயர்

உரைத்தல் - தொழிற்பெயர்

மாநகர் - உரிச்சொற்றொடர்

உலகு - இடவாகுபெயர்

விருந்து - பண்பாகுபெயர்

சார்ந்தவன் - வினையாலனையும் பெயர்

கொம்பினை ஒத்த - உவமையாகுபெயர்

செய்வாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று

அடவிமலைஆறு - உம்மைத்தொகைகள்

தடந்தோள் - உரிச்சொற்றொடர்

காத்தல் - தொழிற்பெயர்

நீலமுடி - பண்புத்தொகை

பதமலர் - உருவகம்

இன்தமிழ் - பண்புத்தொகை

மகிழ்ச்சி - தொழிற்பெயர்

பற்றுவான் - வினையாலணையும் பெயர்

தேரா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

யாவை**யும்** - முற்றும்மை

அரவுநீர் - உம்மைத்தொகை

என்னா - செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

உடையார் - உடை + ய் + ஆர்

உடை - பகுதி, ய் - சந்தி, ஆர் - படர்க்கைப் பல்ர்பால் வினைமுற்று விகுதி.

அகழ்வார் - அகழ் + வ் + ஆர்

அகழ் - பகுதி ; வ் - எதிர்கால இடைநிலை ; ஆர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி

மறத்தல் - மற + த் +தல்.

மற - பகுதி ; த் - சந்தி ; தல் - தொழிற்பெயர் விகுதி.

வைப்பர் - வை + ப் + ப் + அர்

வை - பகுதி ; ப் - சந்தி ; ப் - எதிர்கால இடைநிலை ; அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

ஒறுத்தார் - ஒறு + த் + த் + ஆர்.

ஒறு - பகுதி ; த் - சந்தி ; த் - இறந்தகால இடைநிலை ; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

செய்தார் - செய் + த் +ஆர்

செய் - பகுதி; த் - இறந்தகால இடைநிலை; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

இறந்தார் - இற + த்(ந்) + த் + ஆர்

இற - பகுதி, த் - சந்தி; ந் ஆனது விகாரம்; த் - இறந்தகால இடைநிலை; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

உண்ணாது - உண் + ண் + ஆ + த் + உ

உண் - பகுதி ; ண் - சந்தி ; ஆ - எதிர்மறை இடைநிலை ; த் - எழுத்துப்பேறு ; உ - வினையெச்ச விகுதி.

கேட்டார் - கேள்(ட்) + ட் + ஆர்

கேள் - பகுதி ; 'ள்', 'ட்' ஆனது விகாரம் ; ட் - இறந்தகால இடைநிலை ; ஆர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.

வாட்டான் - வாட்டு + (ஆ) + ஆன்

வாட்டு - பகுதி; ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது ; ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

அழைத்தான் - அழை + த் + த் + ஆன்.

அழை - பகுதி ; த் - சந்தி ; த் - இறந்தகால இடைநிலை ; ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

இரந்து- இர+ த்(ந்) + த் + உ

இர- பகுதி ; த் - சந்தி , 'ந்' ஆனது விகாரம் ; த் - இறந்தகால இடைநிலை ; உ - வினையெச்ச விகுதி.

நல்கினார் - நல்கு + இன் + ஆர்

நல்கு - பகுதி ; இன் - இறந்தகால இடைநிலை ; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

தூங்கினான் - தூங்கு + இன் + ஆன்

தூங்கு - பகுதி ; இன் - இறந்தகால இடைநிலை ; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

இயம்பினார் - இயம்பு + இன் + ஆர்.

இயம்பு - பகுதி ; இன் - இறந்தகால இடைநிலை ; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

தேரான் - தேர் + ஆ + ஆன்

தேர் - பகுதி ; ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்ட்து ; ஆன் - ஆண்பால் வினைமுற்ரு விகுதி.

அஞ்சான் - அஞ்சு + ஆ + ஆன்.

அஞ்சு - பகுதி ; ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது ; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

பற்றுவான் - பற்று + வ் + ஆன்

பற்று - பகுதி ; வ் - எதிர்கால இடைநிலை ; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

தேய்ந்த - தேய் + த்(ந்) + த் +அ

தேய் - பகுதி ; த் - சந்தி , 'ந்' ஆனது விகாரம் ; த் - இறந்தகால இடைநிலை ; அ- பெயரெச்ச விகுதி.

நோக்கான் - நோக்கு + ஆ + அன்.

நோக்கு - பகுதி ; ஆ- எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது ; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

கிளத்தினேன் - கிளத்து + இன் + ஏன்

கிளர்த்து - பகுதி; இன் - இறந்தகால இடைநிலை ; ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

பெற்று - பெறு(பெற்று) + உ

பெறு - பகுதி, ஒற்று இரட்டித்து 'பெற்று' என இறந்தகாலம் காட்டிற்று ; உ - வினையெச்ச விகுதி

சென்றான் - செல்(ன்) + ற் + ஆன்.

செல் - பகுதி ; 'ல்', 'ன்' ஆனது விகாரம் ; ற் - இறந்தகால இடைநிலை ; ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

கடந்து - கட + த் (ந்) + த் + உ

கட - பகுதி ; த் - சந்தி ; ந் ஆனது விகாரம் ; த் - இறந்தகால இடைநிலை ; உ - வினையெச்ச விகுதி.

செல்வான் - செல் + வ் + ஆன்

செல் - பகுதி ; வ் - எதிர்கால இடைநிலை ; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

இரங்குவான் - இரங்கு + வ் + ஆன்

இரங்கு - பகுதி ; வ் - எதிர்கால இடைநிலை ; ஆன் -படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

சேர்ந்தார் - சேர் + த்(ந்) + த் + ஆர்.

சேர் - பகுதி ; த் - சந்தி ; ந் ஆனது விகாரம் ; த் - இறந்தகால இடைநிலை ; ஆர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி

விளக்கி - விளக்கு + இ

விளக்கு - பகுதி; இ - வினையெச்ச விகுதி

**அணி**

**பின்வரும் குறட்பாக்களில் உள்ள அணிகளைச் சுட்டி விளக்குக.**

1. **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

**அணி சுட்டல்:** இக்குறட்பாவில் **உவமை அணி** இடம் பெற்றுள்ளது.

**அணி விளக்கம்** : ஒரு செய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமைய, இடையில் போல போன்ற உவம உருபு பெற்று வருவது உவமையணியாகும்.

**பொருள்:**

**உவமை:** அகழ்வாரைத் தாங்கும் நிலம்.

**உவமேயம்:** இகழ்வார்ப் பொறுத்தல்

**உவம உருபு:**போல

**விளக்கம்:** நிலமானது தன்னைத் தோண்டுபவரையும் விழாது தாங்கும். அதுபோலச் சான்றோர் தம்மை இழித்துப் பேசுவோரைப் பொறுத்துக்கொள்வர் என்பதாம்.

2. **இன்மையுள் இன்மை விருந்தோரால் வன்மையுள்**

**வன்மை மடவார்ப் பொறை.**

**அணி சுட்டல்:** இக்குறட்பாவில், **எடுத்துக்காட்டு உவமையணி** அமைந்துள்ளது.

**அணி விளக்கம்:** ஒரு செய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமைந்து, இடையில் அதுபோல என்னும் உருபு மறைந்திருந்தால் அஃது எடுத்துக்காட்டு உவமை அணியாகும்.

**விளக்கம்:** இச்செய்யுளில் விருந்தினரை வரவேற்று உபசரிக்க இயலாத நிலை, வறுமையுள் கொடிய வறுமை ஆகும் என்பது உவமை; அறிவற்றார் செய்யும் தீமைகளைப் பொறுத்துக்கொள்ளுதல் வலிமையுள் சிறந்த வலிமை என்பது உவமேயம். இடையில் அதுபோல என்னும் உவம உருபு மறைந்து வருவதால் இஃது எடுத்துக்காட்டு உவமையணியாயிற்று.

3. **கண்வனப்பு எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலப்பாடலில் அமைந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

**அணி சுட்டல்** - 'கண் வனப்பு' எனத் தொடங்கும் சிறுபஞ்ச மூலப் பாடலில் **சொற்பொருள் பின்வருநிலை அணி** அமைந்துள்ளது.

**அணி இலக்கணம்** : ஒரு செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, தந்த பொருளையே மீண்டும் தருமாயின் அஃது **சொற்பொருள் பின்வருநிலையணி**யாகும்.

**விளக்கம்** : இச்செய்யுளில் வனப்பு என்னும் சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, அழகு என்னும் ஒரே பொருளைத் தருகிறது. ஆகவே, இப்பாடலில் அமைந்த அணி சொற்பொருள் பின்வருநிலை அணியாயிற்று.

**பொருத்துக.**

உளவாக்கல் - அழித்தல்

நிலைபெறுத்தல் - இறைவர்

நீக்கல் - காத்தல்

தலைவர் - படைத்தல்

**விடை:**

உளவாக்கல் - படைத்தல்

நிலைபெறுத்தல் - காத்தல்

நீக்கல் - அழித்தல்

தலைவர் - இறைவர்

2. அறம் - எழுபது

பொருள் - இருபத்தைந்து

இன்பம் - முப்பத்தெட்டு

**விடை:**

அறம் - முப்பத்தெட்டு

பொருள் - எழுபது

இன்பம் - இருபத்தைந்து

3. ஒற்றளபெடை - குடிதழீஇ

செய்யுளிசையளபெடை - அரங்ங்கம்

இன்னிசை அளபெடை - உழாஅர்

சொல்லிசையளபெடை - உடுப்பதூஉம்

விடை:

ஒற்றளபெடை - அரங்ங்கம்

செய்யுளிசையளபெடை - உழாஅர்

இன்னிசை அளபெடை - உடுப்பதூஉம்

சொல்லிசையளபெடை - குடிதழீஇ

4. வனப்பு - இரக்கம்

கண்ணோட்டம் - அழகு

வாட்டான் - புகழ்

கிளர் - வருத்தான்

விடை:

வனப்பு - அழகு

கண்ணோட்டம் - இரக்கம்

வாட்டான் - வருத்தான்

கிளர் - புகழ்

5. வனப்பு - இனிமை

பிடி - காடு

அடவி - அழகு

மருங்கு - பெண் யானை

வீறு - பக்கம்

மதுரம் - வலிமை

விடை:

வனப்பு - அழகு

பிடி - பெண் யானை

அடவி - காடு

மருங்கு - பக்கம்

வீறு - வலிமை

மதுரம் - இனிமை

6. பொருட்பெயர்ப் பகுபதம் - சென்னையான்

இடப்பெயர்ப் பகுபதம் - மூக்கன்

காலப்பெயர்ப் பகுபதம் - பொன்னன்

சினைப்பெயர்ப் பகுபதம் - சித்திரையான்

விடை:

பொருட்பெயர்ப் பகுபதம் - பொன்னன்

இடப்பெயர்ப் பகுபதம் - சென்னையான்

காலப்பெயர்ப் பகுபதம் - சித்திரையான்

சினைப்பெயர்ப் பகுபதம் - மூக்கன்

7. சொல் இடைநிலை

வருவான் - இறந்தகால இடைநிலை(த்)

காணான் - நிகழ்கால இடைநிலை(கிறு)

பார்த்தான் - எதிர்கால இடைநிலை(வ்)

நடக்கிறான் - எதிர்மறை இடைநிலை(ஆ)

விடை:

வருவான் - எதிர்கால இடைநிலை(வ்)

காணான் - எதிர்மறை இடைநிலை(ஆ)

பார்த்தான் - இறந்தகால இடைநிலை(த்)

நடக்கிறான் - நிகழ்கால இடைநிலை(கிறு)

8. முகத்தல் அளவை ஆகுபெயர் - தலைக்கு ஒருபழம் கொடு

எடுத்தல் அளவை ஆகுபெயர் - இரண்டு லிட்டர் தா

எண்ணல் அளவை ஆகுபெயர் - ஆறு முழம் கொடு

நீட்டல் அளவை ஆகுபெயர் - பத்துக் கிலோ கொடு

விடை:

முகத்தல் அளவை ஆகுபெயர் - இரண்டு லிட்டர் தா

எடுத்தல் அளவை ஆகுபெயர் - பத்துக் கிலோ கொடு

எண்ணல் அளவை ஆகுபெயர் - தலைக்கு ஒரு பழம் கொடு

நீட்டல் அளவை ஆகுபெயர் - ஆறு முழம் கொடு

9. மதுரைக்காண்டம் - பதினாறு படலம்

கூடல் காண்டம் - பதினெட்டுப் படலம்

திருவாலவாய்க்காண்டம் - முப்பது படலம்

விடை:

மதுரைக்காண்டம் - பதினெட்டுப் படலம்

கூடல் காண்டம் - முப்பது படலம்

திருவாலவாய்க்காண்டம் - பதினாறு படலம்

10. நாடு துறைமுகம்

சேரநாடு - காவிரிப்பூம்பட்டினம்

சோழநாடு - கொற்கை

பாண்டியநாடு - முசிறி

விடை:

சேரநாடு - முசிறி

சோழநாடு - காவிரிப்பூம்பட்டினம்

பாண்டியநாடு - கொற்கை

**இத்தொடர் யாரைச் சுட்டும்?**

1. வைய நாடன் - பாண்டியன்
2. தென்னவன் குல தெய்வம் - சோமசுந்தரர்
3. சடையார் பாகத் தமர்ந்த ஞானப் பூங்கோதை - உமையம்மை
4. குற்றம் குற்றமே என்றவர் - நக்கீரர்

**இக்கூற்றினை யார் யாரிடம் கூறினர்?**

| **கூற்று** | **கூறியவர்** | **யாரிடம் கூறப்பட்டது** |
|---|---|---|
| 1. வையை நாடவன் மனக் கருத்துணர்ந்து உய்ய ஓர் கவி உரைத்தருள் | தருமி | சிவபிரான் |
| 2. நேர்ந்து நில் என விலக்கினான். | நக்கீரர் | தருமி |
| 3. இவ்வழுவு பாடலைக் கையுள் நல்கினாய். | தருமி | சிவபிரான் |
| 4. யாரை நம் கவிக்குக் குற்றம் இயம்பினான் | சிவபிரான் | புலவர்கள் |
| 5. குற்றம் குற்றமே என்றான். | நக்கீரர் | சிவபிரான் |

**'காய்ந்த நாவலன் இம்எனத் திருவுருக் கரந்தான்' - இப்பாடலடியில் 'நாவலன்' எனப் பரஞ்சோதி முனிவர் யாரைக் குறிப்பிடுகிறார்?**

புலவராய் வந்த சிவபெருமானை.

**'நானே கிளத்தினேன் என்றான்' - இத்தொடர் யார் யாரை நோக்கிக் கூறியது?**

நக்கீரர், புலவராய் வந்த இறைவரை நோக்கிக் கூறியது.

**'சொற்குற்றமின்று வேறு பொருட்குற்றமென்றான் தூய**

**பொற்குற்றவேணி அண்ணல் பொருட்குற்றமென்னை யென்றான்'**

- **இப்பாடலடிகளைச் சீர் பிரித்து எழுதுக.**

  சொற்குற்ற மின்று வேறு பொருட்குற்ற மென்றான் தூய

  பொற்குற்ற வேணி அண்ணல் பொருட்குற்ற மென்னை யென்றான்.

**தென்ன வன்குள தெய்வ மாகிய**

**மந்தர் கொங்குதேற் வால்க்கை யின்றமின்**

**சொன்ன ழம்பெறச் சொள்ளி நல்கிநார்**

**இன்னல் தீர்ந்தவ நிறைஞ்சி வாங்கினான்.**

- **இப்பாடலில் காணப்பெறும் மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

  தென்ன வன்குல தெய்வமாகிய

  மன்னர் கொங்குதேர் வாழ்க்கை யின்றமிழ்

  சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினார்

  இன்னல் தீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினான்.

**கீழ்க்காணும் தொடர்களிலுள்ள ஆகுபெயர்களை எடுத்தெழுதுக.**

**அ. இரண்டு மீட்டர் போதுமா?**

**விடை: மீட்டர்**

**ஆ. ஐந்து லிட்டர் என்ன விலை?**

**விடை: லிட்டர்**

**கோடிட்ட இடத்தில் உரிய எழுத்துகளைக்கொண்டு நிரப்புக.**

**1. இறைவர் அ __ கிலா விளையாட்டுடையவர்(ல / ள / ழ)**

**விடை:** இறைவர் அலகிலா விளையாட்டுடையவர்.

**2. அ__னவர்க்குச் சர__நாங்களே. ( ண் / ந் / ன்)**

**விடை:** அ**ன்**னவர்க்குச் சர**ண்**நாங்களே.

**3. இகழ்வார்ப் பொறுத்தல் த__(லை / ளை)**

**விடை:** இகழ்வார்ப் பொறுத்தல் **தலை.**

**4. ஒ__த்தார்க்கு ஒ__நாளை இன்பம் (ரு / று)**

**விடை:** ஒறுத்தார்க்கு ஒ**ரு** நாளை இன்பம்.

**5. கண்ணுக்கு அழகு க___ணோட்டம் (ன் / ண்)**

**விடை:** கண்ணுக்கு அழகு **கண்**ணோட்டம்.

**6. எ__வனப்பு இத்துணையாம் எ__றுரைத்தல். (ன் / ண்)**

**விடை:** எ**ண்** வனப்பு இத்துணையாம் எ**ன்**றுரைத்தல்.

**7. தட__தோளும் உளமு__கொண்டு (ங் / ந்)**

**விடை:** தட**ந்**தோளும் உளமு**ங்**கொண்டு.

**8. பே__றமும் பெருந்தொழிலும் பி__ங்குநாடு (ற / ர)**

**விடை:** பேரறமும் பெருந்தொழிலும் பிறங்குநாடு.

**9. வீ__டை ஐவ__ளமகிழ் பூத்து (ரு / று)**

**விடை:** வீ**று**டை ஐவ **ரு**ளமகிழ் பூத்து.

**10. வானம்பாடி இயக்கம் புதுக்கவிதை வளர்ச்சி __த் துணைபுரிந்தது. ( ஐ / ஆல் / கு)**

**விடை:** வானம்பாடி இயக்கம் புதுக்கவிதை வளர்ச்சிக்குத் துணைபுரிந்தது.

**11. மணிக்கொடி என்னும் இதழ் _______ புதுக்கவிதைகளைப் படைத்தனர். (ஐ / ஆல் / கு)**

**விடை**: மணிக்கொடி என்னும் இதழில் புதுக்கவிதைகளைப் படைத்தனர்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கல்வியில் பெரியர் என அழைக்கப்பெறுபவர் ________

விடை: கம்பர்

2. கம்பராமாயணம் _________ காண்டங்களை உடையது.

விடை: ஆறு

3. மொழிகள் பல தோன்றி வளர அடிப்படையான மொழியை _______ என்பர்.

விடை: மூலமொழி

4. இந்தியாவை மொழிகளின் காட்சிசாலை எனக் குறிப்பிட்டவர்______

விடை: ச. அகத்தியலிங்கம்

5. ஒரு மூலமொழியிலிருந்து தோன்றி வளரும் மொழியைக் ________ என்பர்.

விடை: கிளைமொழி

6. திராவிடம் என்னும் சொல்லே __________ எனும் சொல்லில் இருந்து உருவானதாகும்.

விடை: தமிழ்

7. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியர் ________

விடை: கால்டுவெல்.

8. தமிழ்மொழியில் உள்ள மிகப்பழமையான நூல் _______

விடை: தொல்காப்பியம்.

9. கடல்கோளால் கவரப்பட்ட பழந்தமிழ்ப்பகுதி _______

விடை: குமரிக்கண்டம்

10. அளபெடை என்னும் சொல்லுக்கு _____ என்பது பொருள்.

விடை: அளவு அதிகரித்தல்

11. அளபெடை ________ வகைப்படும்

விடை: மூன்று

12. செய்யுளில் ஓசை குறையாதவிடத்தும் குறில் ________ ஆகி அளவெடுப்பது ________ அளபெடை.

விடை: நெடில், இன்னிசை

13. மிகப் பழமையான தமிழ் இலக்கண நூல் _____

விடை: தொல்காப்பியம்

14. குலோத்துங்க சோழனின் அவைப்புலவர்__________

விடை: கம்பர்

15. ஒற்றளவெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை _____

விடை: பத்து

16. பண்ணுக்கு அழகு _______ நன்றென்றல்.

விடை: கேட்டோர்

17. பிறரிடம் இரந்து செல்லாமை ________ அழகு.

விடை: காலுக்கு

18. நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா எனப் பாராட்டப்பெற்றவர் ______ ஆவார்.

விடை: பாரதியார்

19. துரியோதன்னின் தந்தை _______ ஆவார்.

விடை: திருதராட்டிரர்.

20. காந்தியக்கவிஞர் எனப் போற்றப்படுபவர் ________

விடை: நாமக்கல் கவிஞர்

21. உவமைக்கவிஞர் ________ ஆவார்.

விடை: சுரதா

22. புதுக்கவிதை வளர்ச்சியில் ________ பங்கு போற்றத்தக்கது.

விடை: வல்லிக்கண்ணன்

23.. சிந்தனை மாற்றத்தின் விளைவே _______ தோற்றம்.

விடை: புதுக்கவிதை.

24. 'மூன்று மீட்டர் தா' என்பது ______ ஆகுபெயராகும்.

விடை: நீட்டலளவை

25. திருவிளையாடற்புராணத்தை இயற்றியவர் _______

விடை: பரஞ்சோதி முனிவர்

26. திருவிளையாடற்புராணத்தில் காண்டங்கள் ______ உள்ளன.

விடை: மூன்று

27. இறைவரிடம் பாடலைப் பெற்றுச் சென்றவன் _______

விடை: தருமி

28. பொற்கிழி பெறச்சென்ற தருமியைத் தடுத்தவர்_______

விடை: நக்கீரர்

29. உடல் முழுவதும் கண்களை உடையவன் ______

விடை: தேவேந்திரன்

30. கடல் பயணத்தை முந்நீர் வழக்கம் எனக் குறிப்பிடும் நூல்______

விடை: தொல்காப்பியம்

31. காவிரிப்பூம்பட்டினத்தில் சுங்கச்சாலையும் ________ இருந்தன.

விடை: கலங்கரை விளக்கமும்

32. கடலில் செல்லும் பெரிய கலம் ________ எனப்பட்டது.

விடை: நாவாய்

33. பெரிய நாவாய்கள் ________ துணைக்கொண்டே இயங்கின.

விடை:காற்றின்

34. அளவில்லாத பண்டங்கள் _______ மலைபோலக் கிடக்கும்.

விடை: முன்றிலில்

35. முத்துக்குளித்தலைப்பற்றி வெனிசு நாட்டறிஞர் ______ குறித்துள்ளார்.

விடை: மார்க்கோபோலோ

**பாடலடிகளில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

**உலகம் யாவையும் தாமுல வக்கலும்**

**நிலைபெ ருத்தலும் நீக்கலும் நீங்கலா**

**அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்**

**தலைவர் அன்னவர்க் கேசரன் நாங்களே.**

**விடை:**

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| தாமுல | தாமுள |
| நிலைபெருத்தலும் | நிலைபெறுத்தலும் |
| சரன் | சரண் |

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.

விடை: இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை எனக் குறிப்பிட்டவர் யார்?

2. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியன திராவிடப் பெருமொழிகள்.

விடை: திராவிடப் பெருமொழிகள் யாவை?

3. நம் தாய்மொழியாம் தமிழ், செவ்வியல் மொழியாய் ஒளிர்கிறது.

விடை: நம் தாய்மொழியாம் தமிழ் எவ்வாறு ஒளிர்கிறது?

4. பாரதிதாசன் மூடநம்பிக்கைகளைச் சாடினார்.

விடை: பாரதிதாசன் எவற்றைச் சாடினார்?

5. இருபதாம் நூற்றாண்டை உரைநடைக்காலம் என்று வழங்குகிறோம்.

விடை: உரைநடைக்காலம் என்று எந்த நூற்றாண்டை வழங்குகிறோம்?

6. காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை.

விடை: காலுக்கு அழகாவது யாது?

7. சிறுபஞ்சமூலத்தை இயற்றியவர் காரியாசான்.

விடை: சிறுபஞ்சமூலத்தை இயற்றியவர் யார்?

8. பாரதிதாசன் மூடநம்பிக்கைகளைச் சாடினார்.

விடை: பாரதிதாசன் எவற்றைச் சாடினார்?

9. இருபதாம் நூற்றாண்டை உரைநடைக்காலம் என்று வழங்குகின்றோம்.

விடை: உரைநடைக்காலம் என்று எந்த நூற்றாண்டை வழங்குகின்றோம்?

**சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

**1. எளிய மக்களை நோக்கி கவிதை கருவியை திருப்பி அமைத்த பெருமை பாரதியை சாரும்.**

**விடை:** எளிய மக்களை நோக்கி**க்** கவிதை**க்** கருவியை**த்** திருப்பி அமைத்த பெருமை பாரதியை**ச்** சாரும்.

**2. பாரதிதாசனை தொடர்ந்து வாணிதாசன் இயற்கை அழகை படம்பிடித்து காட்டுகிறார்.**

**விடை:** பாரதிதாசனை**த்** தொடர்ந்து வாணிதசன் இயற்கை அழகை**ப்** படம்பிடித்து**க்** காட்டுகிறார்.

**பின்வரும் சொற்களின் பகுதியை எடுத்தெழுதுக.**

**அ. கண்டான் ஆ. கேட்டான் இ. வந்தான் ஈ. எழுதினான்**

**விடை:**

| **சொல்** | **பகுதி** |
|---|---|
| கண்டான் | கண் |
| கேட்டான் | கேள் |
| வந்தான் | வா |
| எழுதினான் | எழுது. |

**தொடர்பில்லாத சொற்களை எடுத்தெழுதுக.**

**அ. பார்த்தான், சொன்னான், பெற்றான், நடப்பான்**

**விடை:** நடப்பான்

**ஆ. பாடுகிறாள், நடித்தார், நடிக்கின்றார், சிரிக்கின்றாள்**

**விடை:** நடித்தார்

**கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் - இத்தொடரில் _______ அளபெடை வந்துள்ளது.

அ) இன்னிசை ஆ) செய்யுளிசை இ) சொல்லிசை

விடை: செய்யுளிசை

2. உடுப்பதூஉம், துய்ப்பதூஉம் இல்லார்க்கு - இக்குறட்பாத் தொடரில் _____ அளபெடை வந்துள்ளது.

அ) சொல்லிசை ஆ) இசைநிறை இ) இன்னிசை

விசை: இன்னிசை

3. கீழ்க்காண்பனவற்றுள் சொல்லிசை அளபெடை_____

அ) எச்சம் பெறாஅ விடின்

ஆ) வரனசைஇ இன்னும் உள்ளேன்

இ) உண்பதூஉம்

விடை: ஆ) வரனசைஇ

4. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் ஒருவர்____

அ. இளம்பூரணர் ஆ. நச்சர் இ. பேராசிரியர்

விடை: நச்சர்

5. தென்திராவிட மொழிகளுள் ஒன்று_________

அ. தெலுங்கு ஆ. மால்தோ இ. தமிழ்

விடை: தமிழ்

6. கண்ணன் என்பது ______ பகுபதம் ஆகும்.

அ) பொருட்பெயர் ஆ) பண்புப்பெயர் இ) சினைப்பெயர்

விடை: சினைப்பெயர்ப்

7. இடைச்சொற்கள் ______ பதம் ஆகும்.

அ. பகு ஆ. பகா இ. விளி

விடை: பகாப்

8. மதுரையான் _____ பெயர்ப்பகுபதம் ஆகும்.

அ. பொருள் ஆ. சினை இ. இடப்

விடை: இடப்

9. பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள் _______

அ. பகுதி, சந்தி ஆ. இடைநிலை, சாரியை இ. பகுதி, விகுதி

விடை: பகுதி, விகுதி

10. ஏவல் வினையாய் அமைவது ________ ஆகும்.

அ.பெயர்ப்பகுபதம் ஆ. வினைப்பகுபதம் இ. எதுவுமில்லை

விடை: வினைப்பகுபதம்

11.'இல்' என்னும் எதிர்மறை இடைநிலை அமைந்துள்ள வினைச்சொல் _____

அ. கேளான் ஆ. வாரான் இ. கண்டிலன்

விடை: கண்டிலன்

12. செய்தான் - இச்சொல்லில் அமைந்துள்ள இடைநிலை _____

அ. இன் ஆ. த் இ. ட்

விடை: த்

13. மேய்ந்தன - இச்சொல்லில் உள்ள விகுதி______

அ. உயர்திணை ஆ. அஃறிணை

விடை: அஃறிணை

14. எழுதினான் -இச்சொல்லில் அமைந்துள்ள இடைநிலை _______ ஆகும்.

அ. த் ஆ. இன் இ. ட்

விடை: இன்

15. கொண்ட - இச்சொல்லின் பகுதி ____

அ. கொண் ஆ. கொள் இ. கொ

விடை: கொள்

16. செய்யற்க - இச்சொல்லில் உள்ள எதிர்மறை இடைநிலை _______

அ. அ ஆ. அல் இ. அற்

விடை: அல்

17. ஒரு பதத்தின் பகுதியோடு பிற உறுப்புகளை இணைப்பது ______ ஆகும்.

அ. சாரியை ஆ. இடைநிலை இ. சந்தி

விடை: சந்தி

18. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்______ ஆகும்.

அ. முகத்தலளவை ஆகுபெயர் ஆ. எண்ணலளவை ஆகுபெயர்

விடை: எண்ணலளவை ஆகுபெயர்

19. மெய்யும் ஆய்தமும் யாப்பில் ________ எனக் குறிக்கப்படும்.

அ. சுட்டெழுத்து ஆ. வினா எழுத்து இ. ஒற்றெழுத்து

விடை: ஒற்றெழுத்து

20. காய்ச்சீர் ________ வகைப்படும்.

அ. இரண்டு ஆ. மூன்று இ. நான்கு

விடை: நான்கு

20. ஆசிரியப்பாவுக்கு உரிய சீர்கள் ________ ஆகும்.

அ. காய்ச்சீர் ஆ. மாச்சீர் இ. கனிச்சீர்

விடை: மாச்சீர்

21. வெண்பாவில் உயர்வு என்னும் ஈற்றுச்சீரில் வரும் ஓரசையின் வாய்ப்பாடு ______

அ. நாள் ஆ. மலர் இ. பிறப்பு

விடை: பிறப்பு

22. ஈரசைச்சீர் _______ வகைப்படும்.

அ. இரண்டு ஆ. நான்கு இ. எட்டு

விடை: நான்கு

23. பழமலைந்து - இச்சீருக்குரிய வாய்ப்பாடு ______

அ. கருவிளங்காய் ஆ. கருவிளம் இ. புளிமாங்காய்

விடை: கருவிளங்காய்

24. வெண்பாவுக்குரிய சீர் _______-

அ. ஈரசைச்சீர் ஆ. மூவகைச்சீர் இ. காய்ச்சீர்

விடை: காய்ச்சீர்

**கீழ்வரும் சொற்கள் வெண்பாவின் ஈற்றுச்சீர்கள். அவற்றுக்குரிய வாய்ப்பாட்டினைப் பட்டியலிடுக.**

மலர் - தலை, அவர், பிற, படும், உளன், கடும், எனின், சொலல், மழை, பசி, விடின்

காசு - பாற்று, நன்று, ஈண்டு

பிறப்பு - அரிது.

**கீழ்க்காணும் குறட்பாவுக்கு அலகிட்டு வாய்ப்பாடு எழுதுக.**

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**

**மறத்தல் அதனினும் நன்று.**

| வ.எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | பொறுத்/தல் | நிரைநேர் | புளிமா |
| 2 | இறப்/பினை | நிரைநிரை | கருவிளம் |
| 3. | என்றும் | நேர்நேர் | தேமா |
| 4. | அதனை | நிரைநேர் | புளிமா |
| 5. | மறத்தல் | நிரைநேர் | புளிமா |
| 6. | அதனினும் | நிரைநிரை | கருவிளம் |
| 7. | நன்று | நேர்நேர் | காசு |

**எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.**

1. **மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**

**தகுதியான் வென்று விடல்.**

**விடை:** எதுகைச்சொற்கள் : மிகுதி, தகுதி.

2. **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

**விடை:** எதுகைச்சொற்கள் :அகழ்வாரை, இகழ்வார்.

ஐ) **மாறியுள்ள சீர்களை முறைப்படுத்துக.**

**இறப்பினை என்றும் பொறுத்தல் அதனினும்**

**நன்று மறத்தல் அதனை.**

**விடை:**

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை

மறத்தல் அதனினும் நன்று.

**பொருள் வேறுபாடு அறிக.**

பொறுத்தல் - பொறுமையாய் இருத்தல்

பொருத்தல் - பொருந்தச் செய்தல்

இறத்தல் - உயிர் விடுதல்

இரத்தல் - யாசித்தல்

நிறை - சால்பு

நிரை - வரிசை

வண்மை - வள்ளல் தன்மை

வன்மை - வலிமை

**இருபொருள் தருக.**

நிறை - சால்பு, எடை.

தலை - முதன்மை, சிரம்.

திரை - கடல் அலை, திரைச்சீலை

கலிங்கம் - ஆடை , ஒருநாடு

கலை - வித்தை, கலைத்தல்

கவி - கவிதை, குரங்கு

**தமிழ்ச்சொல்லை அறிவோம்.**

சுவிட்ச் - சொடுக்கி

ஐஸ்வாட்டர் - குளிர்நீர்

கூல் ட்ரிங்ஸ் - குளிர்சாறுகள்

வாஸிங்மிஸின் - வெளுக்கை இயந்திரம்

கம்பியூட்டர் - கணினி

மௌஸ் - சுட்டி

ஃபைல் - கோப்பு

சி.டி - வட்டி

பிரிஜ் - குளிரூட்டும்பெட்டி

டீ - தேநீர்

டெலிபோன் - தொலைபேசி

கிரைண்டர் - மின் அரைவை

இண்டர்நெட் - இணையம்

டவுன்லோட் - தரவிறக்கம்

காப்பி - நகல்

பெண்டிரைவ் - சிற்றடக்கி

**கீழ்க்காணும் குறட்பாக்களில் இடம் பெற்றுள்ள நயங்களை எழுதுக.**

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

**மோனை:** ----

**எதுகை:** அகழ்வாரைத் இகழ்வார்ப்

**அணி:** உவமை அணி

2. இன்மையுள் இன்மை விருந்தோரால் வன்மையுள்

வன்மை மடவார்ப் பொறை.

**மோனை:** **இ**ன்மையுள் **இ**ன்மை

**எதுகை:** இ**ன்**மையுள் இ**ன்**மை

**அணி** : எடுத்துக்காட்டு உவமை அணி

3. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்

பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

**மோனை:** **ஒ**றுத்தாரை **ஒ**ன்றாக **பொ**றுத்தாரை **பொ**ன்போற்

**பொ**திந்து

**எதுகை:** ஒ**று**த்தாரை பொ**று**த்தாரை

3. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து)

அறனல்ல செய்யாமை நன்று.

**எதுகை:** தி**ற**னல்ல அ**ற**னல்ல

5. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்

தகுதியான் சென்று விடல்.

**மோனை:** **மி**குதியான் **மி**க்கவை

**எதுகை:** மி**கு**தியான் த**கு**தியான்

**கீழ்க்காணும் பாடலடிகளில் இடம் பெற்றுள்ள அளபெடைகளை கண்டறிந்து வகைப்படுத்தி எழுதுக.**

1. **‘இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்கு’**

2. **‘எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்’**

3. **‘உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்’**

**4. அழாஅல் தோழி அழுங்குவர் செலவே'**

**5. 'உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்'**

**விடை:**

| உயிரளபெடை | | | ஒற்றளபெடை | |
|---|---|---|---|---|
| செய்யுளிசை | இன்னிசை | சொல்லிசை | ஒற்று அளபெடுத்தல் | ஆய்தம் அளபெடுத்தல் |
| அழாஅல் | விழைவதூஉம் | உரனசைஇ | இலங்ங்கு | எ∴∴கிலங்கிய |

**1. தம்பி விதுரனை மன்னம் அழைத்தான். - இத்தொடரில் உள்ள 'மன்னன்' என்னும் சொல் யாரைக் குறிக்கிறது?**

**விடை:** திருதராட்டிரன்

**2. மணிநகரின் மருங்கு செல்வான். - இத்தொடரில் 'செல்வான் ' என்பது யாரைக் குறிக்கிறது.**

**விடை:** விதுரன்

**3. நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு - இத்தொடரில் குறிக்கப்படும் நாடு எது?**

**விடை:** பாண்டவர் ஆளும் இந்திர மாநகர்.

**வேர்ச்சொற்களை வினைமுற்றாக்குக.**

1. நான் நாளை சந்தைக்குப் ________(போ)

விடை:போவேன்

2. மாணவர்கள் பள்ளியில் கல்வி _________(கல்)

விடை: கற்கிறார்கள்

3. யானை சினங்கொண்டு _______(பிளிறு)

விடை: பிளிறியது.

4. தேசிங்கு ராசா பாராசாரிக் குதிரையை _______(அடக்கு)

விடை: அடக்கினான்.

5. இந்திய அணி நேற்றைய கால்பந்துப் போட்டியில் வெற்றி _______(பெறு)

விடை: பெற்றது.

**அடைப்புக்குள் உள்ள சொற்களைச் சொற்றொடருக்கு ஏற்ப மாற்றுக.**

1. அவர் ________ வந்தும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

விடை: விரைவாய்

2. மாணவர்களுக்குப் பரிசளிக்குமாறு ______ க் கேட்டுக்கொள்கிறேன். (தலைவர்)

விடை:தலைவரை

3. குழந்தைகள் ________ மரியாதை தருதல் வேண்டும். (பெற்றோர்)

விடை: பெற்றோருக்கு

4. அடுப்பு நன்றாக _______ விறகு காய்ந்திருத்தல் வேண்டும். (எரி)

விடை: எரிய

5. எதிலும் ________க் கடைபிடித்தல் வேண்டும். (எளிமை)

விடை: எளிமையை

**பெயரெச்சத்தை வினைமுற்றாய் மாற்றி எழுதுக.**

(எ-டு) : வனப்பு மிக்க சோலை - சோலை வனப்பு மிக்கது

1. துள்ளி ஓடிய புள்ளிமான்

விடை: புள்ளிமான் துள்ளி ஓடியது

2. மிகவும் இனித்த பழம்

விடை: பழம் மிகவும் இனித்தது.

3. பாடம் படித்த வைகறைச் செல்வி.

விடை: வைகறைச் செல்வி பாடம் படித்தாள்.

4.நீதி தவறாத மன்னன்

விடை: மன்னன் நீதி தவறாதவன்.

5. நேற்று பெய்த மழை

விடை: நேற்று மழை பெய்தது.

**வினைமுற்றைப் பெயரெச்சமாய் மாற்றுக.**

(எ-டு) : நேற்று மதியழகன் வந்தான். - நேற்று வந்த மதியழகன்

1. எழிலன் ப்டம் வரைந்தான்.

விடை: படம் வரைந்த எழிலன்

2. அப்பா சினம் கொண்டார்.

விடை: சினம் கொண்ட அப்பா.

3. எழில் பாம்பைக் கண்டாள்.

விடை: எழில் கண்ட பாம்பு

4. குதிரை விரைவாக ஓடியது.

விடை: விரைவாக ஓடிய குதிரை.

5.குரங்குகள் தாவிக் குதித்தன

விடை: தாவிக் குதித்த குரங்குகள்.

**மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.**

1. **கிழக்கு திசைக்குப் பெயர் உதிக்கின்ற ஞாயிறு.**

விடை: ஞாயிறு உதிக்கின்ற திசைக்குப் பெயர் கிழக்கு.

2. **பிறப்பிடம் துன்பத்துக்கும் சோம்பலே தீமைக்கும்.**

விடை: சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்

3. **பொன்செய்யும் மருந்து மனமே என்ற போதும்.**

விடை: போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து.

**பொருள் கூறுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொங்கு | - | தேன் | இன்னல் | - | துன்பம் |
| வேணி | - | சடை | குழல் | - | கூந்தல் |
| நாற்றம் | - | மணம் | ஆகம் | - | உடல் |
| நுதல்விழி | - | நெற்றிக்கண் | சிரம் | - | தலை. |

**மரபுத்தொடர்களைச் சொற்றொடர்களில் அமைக்க.**

1. **கைவந்த கலை**

மீனவர்களுக்குக் கடலில் நீந்துவது **கைவந்த கலையாகும்.**

2. **அத்தி பூத்தாற்போல**

பல நாள்களாய் வாராமல் இருந்த என் நண்பன் வந்ததைக் கண்ட என் தாய், அவனைப் பார்த்து, அவன் வந்தது '**அத்திபூத்தாற்போல இருக்கிறதே**' என்று கூறினார்.

**3. உள்ளங்கை நெல்லிக்கனி**

எங்கள் தமிழாசிரியர் இலக்கணத்தை **உள்ளங்கை நெல்லிக்கனி**போல் எளிதாய்ப் புரிந்துகொள்ளுமாறு நடத்துவார்.

**சொற்றொடர் வகையை அறிந்து எழுதுக.**

**1. நாவாய்களை வங்கம் என்றும் கூறுவர்.**

விடை: செய்திவாக்கியம்

**2. கிரேக்கர்களையும் உரோமானியரையும் தமிழர் எவ்வாறு அழைத்தனர்?**

விடை: வினா வாக்கியம்

**3. கண்ணகி "நானும் வருவேன்" என்று கோவலனிடம் கூறினாள்.**

விடை: நேர்க்கூற்று வாக்கியம்

**பின்வரும் பெயர்களை அசை பிரித்து எழுதுக.**

அ. தில்/லை - நேர்நேர் - தேமா

ஆ. வள/வன் - நிரைநேர் - புளிமா

இ. இளங்/கோ - நிரைநேர் - புளிமா

ஈ. தொல்/காப்/பியர் - நேர்நேர்நிரை - தேமாங்கனி

**விடுபட்ட இடங்களை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| அன்/புநாண் | ஒப்/புர/வு | கண்/ணோட்/டம் |
| நேர்**நிரை** | நேர்**நிரை**நேர் | நேர்நேர்நேர் |
| கூவிளம் | கூவிளங்காய் | தேமாங்காய் |
| ஆற்/றுவார் | ஆற்/றல் | பணி/தல் |
| நேர்நிரை | **நேர்நேர்** | நிரைநேர் |
| **கூவிளம்** | தேமா | **புளிமா** |